**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No.22/2021**

**2026**ம் வருடம் ஏப்ரல் திங்கள் 29ம் நாள் வாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு.A.லோகநாதன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திருமதி.பாக்கியத்தாய் (PW1) கிராமம்:
தந்தை / கணவர் பெயர் :ஏசையா தொழில் :
வயது :

முதல் விசாரணை:–

1. நான் இவ்வழக்கின் 1ம் வாதியாவேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாய் தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்களை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. 19.12.2020 தேதியிட்ட தாவாச் சொத்தைப் பொறுத்து 1ம் வாதியின் தாத்தா ஜோதி என்பவர் பெயரிலான பட்டா எண்.486க்குண்டான ஆவணத்தின் தமிழ்நாடு அரசு இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கொடிவழி ஜாபிதா அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 2019–2020 வருடத்திற்குண்டான 1ம் வாதியின் மகன் ஜோசப்பிரபாகரன் பெயரிலான கதவு எண்.3/10 வீட்டைப் பொறுத்து செலுத்திய வீட்டு வரி இரசீது எண்.20072ன் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 21.12.2020 தேதியிட்ட 01.01.1987 முதல் 20.12.2020 நாள் வரை தாவா

சொத்தைப் பொறுத்து எடுக்கப்பட்ட வில்லங்க சான்று தமிழ்நாடு அரசு இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.04.29 17:37:13 +0530